# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## மூன்றாம் தவணைப் பரீட்சை- 2019
## வணிகக்கல்வியும் கணக்கீடும்

60 T I, II

தரம்11

மூன்று மணித்தியாலயம்

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## பகுதி 1

**கவனிக்க:-**

**I. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக**

**I. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

➢ பின்வரும் சம்பவத்தை அவதானித்து 1 தொடக்கம் 5 வரையான வினாக்களுக்கு விடையெழுதுக.

ஐங்கரன் என்பவர் தனது சொந்த சேமிப்பு மற்றும் வங்கிக்கடனைப் பெற்று சிறிய ரக மோட்டார் வாகனம் இரண்டினைக் கொள்வனவு செய்து பாடசாலை மாணவர்களையும், ஆசிரியர்களையும் குறைந்தளவு சேவைக் கட்டணத்தில் பாடசாலைக்கு ஏற்றியிறக்கும் வணிகமொன்றை இரண்டு சாரதிகளை வேலைக்கமர்த்தி 'கரன் ரவல்ஸ்' என்னும் பெயரில் நடாத்தி வருகின்றார்.

1. கரன் வணிகத்தினால் பூர்த்தி செய்யப்படும் மனித விருப்பமாக அமைவது,
   (1) போக்குவரத்து
   (2) தனியார் போக்குவரத்து சேவை
   (3) அரச போக்குவரத்து சேவை
   (4) மேற்கூறிய அனைத்தும்

2. மேற்கூறிய வணிகத்தில் உள்ளக ரீதியான அக்கறை செலுத்தும் தரப்பினராகக் கருதப்படகூடியவர்,
   (1) மோட்டார் வாகன உரிமையாளரான ஐங்கரன்
   (2) வங்கிக் கடனை வழங்கிய நிறுவனம்
   (3) போக்குவரத்துச் சேவையை வழங்க அனுமதியளித்த அரச நிறுவனம்
   (4) ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்

3. 'கரன் ரவல்ஸ்' பின்வருவனவற்றுள் எவ்வகையான வணிக அமைப்பைச் சார்ந்தது,
   (1) தனியார்துறை அமைப்புக்களில் தனியாள் வணிகம்
   (2) பொதுத்துறை அமைப்புக்களில் தனியாள் வணிகம்
   (3) தனியார்துறை அமைப்புக்களில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனி
   (4) தனியார்துறை அமைப்புக்களில் பங்குடைமை வணிகம்

4. மேற்படி வணிகத்தின் உரிமையாளரான ஐங்கரன் இரண்டு மோட்டார் வாகனங்களையும் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனத்தில் காப்புறுதி செய்திருந்தார். சிறிய விபத்தொன்றின் காரணமாக பாதையில் சென்ற மோட்டார் சைக்கிளொன்று சேதத்திற்குள்ளானது. இங்கு காப்புறுதியுடன் தொடர்புடைய முதலாம், மூன்றாம் கட்சியினரை முறையாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
   (1) ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனம், ஐங்கரன்
   (2) ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனம், மோட்டார் சைக்கிள் உரிமையாளர்
   (3) மோட்டார் சைக்கிள் உரிமையாளர், ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனம்
   (4) ஐங்கரன், மோட்டார் சைக்கிள் உரிமையாளர்



kalvi.lk

5. இலங்கையில் மோட்டார் வாகனங்களை பதிவு செய்யும் நிறுவனம் வணிக அமைப்புக்களில் எவ்வகையைச் சேர்ந்தது?
(1) அரச கூட்டுத்தாபனம் (2) அரச திணைக்களம்
(3) அரச கம்பனி (4) கூட்டுறவு அமைப்பு

6. உற்பத்திச் செயன்முறைக்கு பயன்படுத்தப்படும் நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி என்பன வணிகமொன்றிற்கு,
(1) பௌதீக வளமாகும். (2) வெளியீடாகும்.
(3) உள்ளீடாகும். (4) செயன்முறையாகும்.

7. ' வங்கிகள் வைப்புக்களுக்காக வழங்கும் வட்டிவீதத்தில் ஒரு நாட்டின் சேமிப்பானது தங்கியுள்ளது' மேலே தரப்பட்ட கூற்றினை எவ்வகையான சூழல் காரணியாகக் கருத முடியும்?
(1) சமூக கலாசாரச் சூழல் (2) மக்கட்சூழல்
(3) பொருளாதாரச்சூழல் (4) அரசியல் சூழல்

8. வணிகமொன்றின் சூழலில் ஏற்படும் மாற்றங்கள் சில கீழே தரப்பட்டுள்ளது.
A. தேவையான மூலதனம் காணப்படல்
B. அரச வங்கிகளில் குறைந்த வட்டிவீதத்தில் கடன் வழங்கல்
C. அதிவேக பாதைகள், மேம்பாலங்கள் உருவாக்கப்படல்
D. ஊழியர்கள் விசேட திறமை கொண்டவர்களாகக் காணப்படுவதுடன் அர்ப்பணிப்புடன் செயற்படல்
மேலே குறிப்பிட்டவற்றுள் பலத்தை மாத்திரம் உள்ளடக்கும் விடைத்தொகுதியாக அமைவது,
(1) A, B (2) A, C (3) A, D (4) C, D

9. ராகுலன் என்பவர் தனது கட்டிட பொருட்கள் விற்பனை நிலையத்தை ' சக்தி' எனும் பெயரில் பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கின்றார். இப்பதிவுச் சான்றிதழை வழங்கும் நிறுவனம்,
(1) பிரதேச சபை (2) கம்பனி பதிவாளர் திணைக்களம்
(3) நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை (4) பிரதேச செயலகம்

10. காசோலையின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடிய முறையாகக் கருதப்படுவது,
(1) காசோலைக்கு குறுக்குக் கோடிடல்
(2) காசோலைக்கு சரியாக புறக்குறிப்பிடல்
(3) அடிக்கட்டையை சரியாக பூர்த்தி செய்து வைத்திருத்தல்
(4) காசோலையின் காந்தப்புல நிரலில் எதனையும் எழுதாதிருத்தல்

11. வணிக வங்கியொன்றில் நடைமுறைக் கணக்கை உடைய ஒருவரால் அக்கணக்கினூடாக கொடுப்பனவு செய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய இலத்திரனியல் பணமாக அமைவது,
(1) கடனட்டை (2) வரவட்டை (3) காசோலை (4) முற்செலுத்திய அட்டை

12. பொதுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி தொடர்பாக சில கூற்றுக்கள் கீழே தரப்படுகின்றன.
A. ஆயுட் காப்புறுதி - நட்ட அச்சம் நிச்சயமானதல்ல
B. பொதுக்காப்புறுதி – காப்புறுதி ஒப்பந்தத்தை ஒப்படைக்க முடியும்
C. பொதுக்காப்புறுதி – மேலதிக அனுகூலம் கிடைக்காது.
D. ஆயுட் காப்புறுதி - இழப்பீட்டுத்தத்துவம் பொருத்தமானதாகும்
மேற் கூறப்பட்டவற்றுள் சரியான கூற்றைக் குறிக்கும் விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.
(1) A, B (2) A, C, D (3) B, C (4) A, B, C

13. வணிகமொன்று புதிய உற்பத்திப்பொருளொன்றை அறிமுகப்படுத்துவதற்கான விளம்பரமொன்றை இணையத்தில் பிரசுரித்திருந்தது. இது ஒரு,
(1) உள்வாரியான, வாய்மொழி மூலமான, இலத்திரனியல் தொடர்பாடலாகும்.
(2) உள்வாரியான, எழுத்து மூலமான, இலத்திரனியல் தொடர்பாடலாகும்.
(3) வெளிவாரியான, வாய்மொழி மூலமான, இலத்திரனியல் தொடர்பாடலாகும்.
(4) வெளிவாரியான, எழுத்து மூலமான, இலத்திரனியல் தொடர்பாடலாகும்.



kalvi.lk

14. போக்குவரத்தின் அடிப்படை மூலக்கூறுகள் பாதை, ஊடகம், சக்தி, தரிப்பிடம் என்பனவாகும். தெருப் போக்குவரத்து முறையினை உதாரணமாகக் கொண்டு ஒவ்வொரு மூலக்கூறுக்கும் சரியான உதாரணத்தை முறையாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
(1) அதிவேகபாதை, பேரூந்து, பெற்றோல், பேரூந்து தரிப்பிடம்
(2) பெருந்தெரு, டீசல், புகையிரதம், புகையிரத நிலையம்
(3) பேரூந்து தரிப்பிடம், பேரூந்து, பெருந்தெரு, பெற்றோல்
(4) அதிவேகபாதை, மகிழூந்து, பேரூந்து தரிப்பிடம், பெற்றோல்

15. சுதா வெதுப்பகமானது தனது உற்பத்திப்பொருட்களை சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்வதுடன் நடமாடும் வாகனத்தில் நுகர்வோருக்கு கொண்டு சென்று விற்பனை செய்வதானது பின்வருவனவற்றுள் எச்சந்தைப்படுத்தல் மாறிக்குள் உள்ளடங்குகின்றது?
(1) உற்பத்திப்பொருள் (2) மேம்படுத்தல் (3) விலை (4) இடம்

16. அரசின் குறுங்கால நிதித்தேவையினை நிறைவேற்றும் பொருட்டு அரசின் சார்பாக இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் பிணைப்பத்திர வகையாக அமைவது,
(1) சாதாரண பங்குகள் (2) திறைசேரி உண்டியல்கள்
(3) நிலையான வைப்பு (4) திறைசேரி முறிகள்

17. கணக்கீட்டு கூறுகள் சிலவற்றின் பண்புகள் கீழே தரப்படுகின்றன.
A. எதிர்காலத்தில் பொருளாதார நலன்கள் உட்பாய்ச்சப்படுதல்
B. நிகழ்காலக் கடப்பாடு கொண்டதாகக் காணப்படல்
C. தீர்ப்பனவின்போது வணிகத்தின் வளங்களிலிருந்து ஒரு பகுதி வெளிச் செல்லல்
மேற்கூறியவற்றுள் பொறுப்புக்களின் பண்புகளை மட்டும் கொண்ட விடைத்தொகுதியாக அமைவது,
(1) A, B (2) A, C (3) B, C (4) A, B, C

18. கீதா வணிகமானது மீள்விற்பனைக்காக சந்தியா வியாபார நிலையத்திலிருந்து ரூ 50000 இற்கு பொருட்களை கடனுக்கு கொள்வனவு செய்யும்போது,
(1) சொத்துக்கள் ரூ 50000 குறைவடையும் அதேவேளை பொறுப்புக்கள் ரூ 50000 அதிகரிக்கும்.
(2) சொத்துக்கள் ரூ 50000 அதிகரிக்கும் அதேவேளை பொறுப்புக்கள் ரூ 50000 அதிகரிக்கும்.
(3) சொத்துக்கள் ரூ 50000 அதிகரிக்கும் அதேவேளை பொறுப்புக்கள் ரூ 50000 குறைவடையும்.
(4) சொத்துக்கள் ரூ 50000 குறைவடையும் அதேவேளை பொறுப்புக்கள் ரூ 50000 குறைவடையும்.

➢ பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 19, 20 ஆம் வினாக்களுக்கு விடை தருக.
2018.03.31 இல் உள்ளவாறான றொசானா வணிகத்தின் சொத்துக்கள், பொறுப்புக்கள் விபரம் கீழே தரப்படுகின்றன.

| | |
|---|---|
| மோட்டார் வாகனம் | ரூ 150 000 |
| வங்கிக்கடன் | ரூ 50 000 |
| கடன்பட்டோர் | ரூ 20 000 |
| கடன்கொடுத்தோர் | ரூ 25 000 |
| காசு | ரூ 12 000 |

19. 2018.03.31 இல் உள்ளவாறான இவ்வணிகத்தின் மூலதனம்
(1) ரூ 107 000 (2) ரூ 132 000 (3) ரூ 157 000 (4) ரூ 207 000

20. 2018.03.31 இல் உள்ளவாறான இவ்வணிகத்தின் நடைமுறைச்சொத்து
(1) ரூ 37 000 (2) ரூ 75 000 (3) ரூ 32 000 (4) ரூ 182 000

21. உரிமையாளரால் காசாக பற்றிய ரூ 6000 ஐ பதிவது தொடர்பில் பயன்படுத்தப்பட்ட மூலஆவணத்தையும், மூல பதிவேட்டையும் சரியான ஒழுங்கு முறையில் எடுத்துக் காட்டும் விடையாக அமைவது,
(1) காசேடு, பற்றுச்சீட்டு (2) கொடுப்பனவுக் கைச்சாத்து, காசேடு
(3) பற்றுச்சீட்டு, பொதுநாட்குறிப்பு (4) பற்றுச்சீட்டு, நாட்குறிப்பு



kalvi.lk

22. பின்வருவனவற்றுள் சரியான கூற்றுக்களைத் தெரிவு செய்க.

A. உட்கொண்டுவரும் செலவு ரூ 100 சில்லறைக் காசேட்டில் பேரேட்டு நிரலில் பதிவு செய்ய வேண்டும்.

B. தானமாகக் கொடுத்த ரூ 100 நானாவித செலவு நிரலில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

C. ஜனகனுக்கு கொடுத்த ரூ 500 ஜனகன் நிரலில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

D. அனுவிற்கு கொடுத்தது ரூ 600 நானாவித செலவுக் கணக்கில் உள்ளடக்கப்படல்வேண்டும்.

(1) B, C (2) A, D (3) C, D (4) A, B

23. வங்கிக் கணக்கிணக்கக்கூற்று தயார் செய்வதன் பிரதான நோக்கமாக அமைவது,

(1) பதிவுகளின் திருத்தமான தன்மையை அறிதல்

(2) வணிகத்தின் வங்கிக்கணக்கு மீதியையும் , வங்கிக்கூற்று மீதியையும் இணங்கச் செய்தல்

(3) இன்னும் வசூலாகாத காசோலைகளை அறிதல்

(4) வங்கியில் மாற்றப்படாத காசோலைகளை அறிதல்

24. தொங்கல் கணக்கினை தோற்றுவிக்காத கணக்கீட்டு வழுவாக அமைவது,

(1) காசேட்டின் செலவுப்பக்க கூட்டுத்தொகை ரூ 1000 குறைவாகக் கூட்டப்பட்டிருந்தது.

(2) ஆறுமுகத்திற்கு கொடுத்த காசு ரூ 10000 அருமைநாயகத்தின் கணக்கில் பதியப்பட்டது.

(3) மூலப்பதிவேடு ஒன்றின் பதிவு ஒன்று பேரேட்டுக்கு மாற்றப்படவில்லை.

(4) சிவராசாவிற்கு விற்பனை அவர் கணக்கில் பதியப்படவில்லை

25. கணக்கீட்டு வழுவொன்றினை திருத்துவதற்கான பொதுநாட்குறிப்பு பதிவொன்றுக்கான விளம்பல் கீழே தரப்படுகின்றது.

| திகதி | கை.இ | விபரம் | பே.ப | வரவு | செலவு |
|---|---|---|---|---|---|
| | | ………………………………. வரவு<br>……………………………. செலவு<br>(விற்பனைக் கணக்கில் ரூ 9000 விற்பனை குறைவாக பதிந்தமை திருத்தப்பட்டது.) | | 9 000 | 9 000 |

மேற்கூறிய விளம்பலுக்குப் பொருத்தமான நாட்குறிப்புப் பதிவினை சரியாகக் காட்டும் விடை

(1) விற்பனைக் கணக்கு வரவு, தொங்கல் கணக்கு செலவு

(2) காசுக் கணக்கு வரவு, விற்பனைக் கணக்கு செலவு

(3) தொங்கல் கணக்கு வரவு, விற்பனைக் கணக்கு செலவு

(4) விற்பனைக் கணக்கு வரவு, காசுக் கணக்கு செலவு

26. பின்வரும் இரண்டு சமன்பாடுகளின் மூலம் கணக்கிடக் கூடியவற்றை முறையாகக் காட்டுவது,

❖ ஆரம்ப இருப்பு + கொள்வனவு + கொள்வனவுச் செலவு - இறுதியிருப்பு = ……………………..

❖ விற்பனை – விற்றசரக்கின் கொள்விலை = ………………………..

(1) மொத்தஇலாபம், விற்ற சரக்கின் கொள்விலை

(2) விற்றசரக்கின் கொள்விலை, மொத்தஇலாபம்

(3) விற்றசரக்கின் கொள்விலை, தேறிய இலாபம்

(4) தேறியஇலாபம், விற்றசரக்கின் கொள்விலை

➢ பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 27, 28 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

கீழே 31.12.2018 இல் சுமந்திரன் வணிகத்தின் பரீட்சைமீதியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சில தகவல்கள் ஆகும்.

பரீட்சைமீதி 31.12.2018 இல்

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| தளபாடம் | 80 000 | |
| தளபாட பெறுமான தேய்வொதுக்கம் (01.01.2018) | | 16 000 |

செம்மையாக்கல்:-

❖ தளபாடத்திற்கு 10 % பெறுமானத் தேய்வொதுக்கம் செய்க.

27. மேற்படி தகவலின்படி குறித்த நிதியாண்டுக்கான தளபாடத்தேய்வாக இலாப நட்டக்கூற்றில் காட்டப்படும்தொகை,
(1) ரூ 8 000 (2) ரூ 16 000 (3) ரூ 24 000 (4) ரூ 32 000

28. நிதிநிலைமைக் கூற்றில் திரண்ட பெறுமானத்தேய்வு ஒதுக்கமாக காட்டப்படும் தொகையாக அமைவது,
(1) ரூ 8 000 (2) ரூ 32 000 (3) ரூ 16 000 (4) ரூ 24 000

29. ரமணன் மாத வாடகையாக ரூ 2 000 க்கு கடை ஒன்றினை வாடகைக்கு பெற்று பலசரக்கு வியாபாரம் ஒன்றினை நடாத்தி வருகின்றார். இவர் 2018 ஆம் நிதியாண்டில் 8 மாத வாடகையை மட்டுமே செலுத்தியிருந்தாரெனின் அட்டுறு வாடகையாகக் காணப்படும் தொகை
(1) ரூ 8 000 (2) ரூ 16 000 (3) ரூ 24 000 (4) ரூ 12 000

30. இயந்திமொன்றின் எஞ்சிய பெறுமானம் 10 வருடங்களின் பின்னர் ரூ 10 000 ஆகும். வருடாந்த தேய்வின் அளவு ரூ 5 000. இயந்திரத்தின் கொள்விலையாக அமைவது,
(1) ரூ 50 000 (2) ரூ 55 000 (3) ரூ 45 000 (4) ரூ 60 000

31. இலாப நோக்கற்ற அமைப்புக்களால் தயாரிக்கப்படும் கணக்குகளின் பண்புகள் சில கீழே தரப்படுகின்றன.
A. காசு அடிப்படையில் தயார் செய்யப்படுதல்
B. இலாபநட்டக் கூற்றை ஒத்திருத்தல்
C. அட்டுறு அடிப்படையில் தயார் செய்யப்படுதல்
D. கணக்காண்டின் இறுதியில் இறுதிக் காசு மீதியைக் காட்டும்
E. ஆண்டுக்குரிய வருமானங்கள் மற்றும் செலவினங்கள் மட்டும் பதிவு செய்யப்படுதல்
மேற்கூறியவற்றுள் வருமானக்கூற்று/ வருமானச் செலவுக் கணக்கின் பண்புகளை மட்டும் காட்டும் விடைத்தொகுதியாக அமைவது,
(1) A, D (2) B, C, D (3) B, C, E (4) A, B, C

Education
அධ்‍යාපන

32. கீழே தரப்பட்டுள்ள வெற்றுக்கூட்டுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

| பெற்றுக்கொண்ட வருடாந்த அங்கத்துவக் கட்டணம் | + | இதுவரை பெற்றுக்கொள்ளப்படாத வருடாந்த அங்கத்துவக் கட்டணம் | = | ....................................... |
|---|---|---|---|---|

(1) வருமான மிகை
(2) வருடாந்த அங்கத்துவக் கட்டண வருமானம்
(3) ஓர் அங்கத்தவரின் வருடாந்த அங்கத்துவக் கட்டணம்
(4) காசுமீதி

➢ பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 32, 33 வினாக்களுக்கு விடை தருக.
மேசைகளை உற்பத்தி செய்யும் நிலையமொன்றில் ஜனவரி மாதம் பெறப்பட்ட தகவல் சில கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| மொத்த உற்பத்திக் கிரயம் | ரூ 200 000 |
| மாதத்தில் உற்பத்தி செய்த அலுமாரிகள் | ரூ 100 |

மேசைக்குரிய இலாப எல்லை அலகுக்கான உற்பத்திக் கிரயத்தின் 20% ஆகும்.

33. ஒரு அலுமாரியின் உற்பத்திக் கிரயமாக அமைவது,
(1) ரூ 2000 (2) ரூ 2 500 (3) ரூ 3 000 (4) ரூ 4 000

34. அலுமாரி ஒன்றின் விற்பனை விலை,
(1) ரூ 400 (2) ரூ 2 500 (3) ரூ 2 400 (4) ரூ 2 800

➢ பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 35 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

இம்ரான் என்பவர் ரூ 200 000 இனை ஈடுபடுத்தி ஆரம்பித்த வணிகத்தின் 31.12.2018 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அந்நிறுவனத்தின் கணக்கு எழுதுநரால் தயாரிக்கப்பட்ட இலாப நட்டக்கூற்று, நிதிநிலைமைக் கூற்று என்பன கீழே தரப்படுகின்றது.

**இலாப நட்டக்கூற்று**

| **வருமானம்** | **ரூ** | **ரூ** |
|---|---|---|
| விற்பனைகள் | 200 000 | |
| பெற்ற தரகு | 3 000 | |
| | | 203 000 |
| **செலவுகள்** | | |
| கொள்வனவுகள் | 100 000 | |
| உள்வந்த வண்டிக் கூலி | 5 000 | |
| விற்பனையாளர் சம்பளம் | 10 000 | |
| வாடகை | 12 000 | |
| வங்கிக்கடன் வட்டி | 12 000 | |
| தொலைபேசிக் கட்டணம் | 3 000 | |
| கொடுத்த கழிவுகள் | 1 000 | (143 000) |
| தேறிய இலாபம் | | 60 000 |

**நிதிநிலைமைக் கூற்று**

| **சொத்துக்கள்** | ரூ |
|---|---|
| மோட்டார் வாகனம் | 200 000 |
| தளபாடங்கள் | 100 000 |
| கடன்பட்டோர் | 34 000 |
| காசுமீதி | 50 000 |
| | 384 000 |
| **உரிமையாண்மையும், பொறுப்புக்களும்** | |
| மூலதனம் | 230 000 |
| தேறிய இலாபம் | 60 000 |
| வங்கிக்கடன் | 60 000 |
| கடன்கொடுத்தோர் | 30 000 |
| செலுத்த வேண்டிய வங்கிக்கடன் வட்டி | 2 000 |
| அட்டுறு வாடகை | 2 000 |
| | 384 000 |

35. இவ் வணிகத்தின் 31.12.2018 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விற்ற சரக்கின் கொள்விலை
(1) ரூ 62 000 (2) ரூ 98 000 (3) ரூ 95 000 (4) ரூ 105 000

36. இவ் வணிகத்தின் 31.12.2018 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த இலாபம்
(1) ரூ 98 000 (2) ரூ 95 000 (3) ரூ 105 000 (4) ரூ 65 000

37. இவ்வணிகத்தின் 31.12.2018 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டக் கூற்றில் குறிப்பிடப்படும் விற்பனை விநியோகச் செலவுகளின் மொத்தத் தொகை
(1) ரூ 15 000 (2) ரூ 10 000 (3) ரூ 11 000 (4) ரூ 13 000

38. இவ்வணிகத்தில் 31.12.2018 இல் முடிவடைந்த ஆண்டில் பணமாகச் செலுத்தப்பட்ட வாடகையின் பெறுமதி,
(1) ரூ 10 000 (2) ரூ 12 000 (3) ரூ 2 000 (4) ரூ 8 000

39. இவ்வணிகத்தில் 01.01.2018 இல் இருந்து 31.12.2018 வரை ஏற்பட்ட உரிமையாண்மையின் அதிகரிப்பு
(1) ரூ 30 000 (2) ரூ 230 000 (3) ரூ 382 000 (4) ரூ 60 000

40. இவ்வணிகத்தின் 31.12.2018 இல் உள்ளவாறு மொத்த நடைமுறையல்லாப் பொறுப்பின் பெறுமதியையும், மொத்த நடைமுறைச் சொத்தின் பெறுமதியையும் முறையே எடுத்துக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
(1) ரூ 90 000, ரூ 384 000 (2) ரூ 34 000, ரூ 84 000
(3) ரூ 60 000, ரூ 84 000 (4) ரூ 60 000, ரூ 94 000

(40×1= 40 புள்ளிகள்)



kalvi.lk

**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**மூன்றாம் தவணைப் பரீட்சை- 2019**
**வணிகக்கல்வியும் கணக்கீடும்**

**தரம்11** **பகுதி 11**

**அறிவுறுத்தல்:-**
**முதலாம் வினா உட்பட, பகுதி 1 இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி 11 இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

**வினா இல 01**

❖ **பின்வரும் சம்பவத்தை பயன்படுத்தி (1) தொடக்கம் (10) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

ரதன் என்பவர் க.பொ.த உயர்தரம் கற்று பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத காரணத்தினால் குளிரூட்டி திருத்துதல் (Air condition repairing) தொடர்பான பயிற்சி நெறியொன்றினை திறன்பட முடித்திருந்தார். இவர் சிறிய கடையொன்றினை மாதவாடகை ரூ 5 000 க்கு பெற்று குளிரூட்டி திருத்தகம் ஒன்றினை 01.01.2018 இல் ஆரம்பித்திருந்தார்.

ரதன் பத்திரிகையில் தொலைபேசி அழைப்பின் மூலம் வீடு, அலுவலகங்களுக்கு நேரடியாகச் சென்று திருத்தங்களை மேற்கொள்ளமுடியும் என விளம்பரம் செய்திருந்தார். ரதனின் தரமான சேவை காரணமாக இவரை நாடி வரும் வாடிக்கையாளர் எண்ணிக்கை அதிகரித்தது. இதனால் தனக்கு உதவியாக குளிரூட்டி திருத்தகத்தை மேற்பார்வை செய்யவென தனது நண்பன் குகனை முகாமையாளராக 01.01.2019 இல் ரூ 15 000 சம்பளத்துடன் சேர்த்துக்கொண்டதுடன், மேலதிகமாக இரண்டு ஊழியர்களை மாதாந்தம் ரூ 10 000 சம்பளத்தில் வேலைக்கமர்த்தினார்.

➢ **01.01.2019 இல் ரதனின் வணிகத்தில் காணப்பட்ட மீதிகள் வருமாறு:-**

| | | |
|---|---|---|
| திருத்தும் உபகரணங்கள் | ரூ | 80 000 |
| காசுமீதி | ரூ | 20 000 |
| தளபாடங்கள் | ரூ | 60 000 |
| கடன்பட்டோர்(திருத்தம் தொடர்பாக வருமதியானவை) | ரூ | 30 000 |
| அட்டுறு வாடகை | ரூ | 10 000 |

➢ **பின்வருவன 31 ஜனவரி 2019 இல் முடிவடைந்த மாதத்தில் நிகழ்ந்த கொடுக்கல், வாங்கலாகும்.**

| | | |
|---|---|---|
| திருத்தம் மூலம் பெற்ற வருமானங்கள் | ரூ | 150 000 |
| திருத்தங்களை மேற்கொள்வதற்கான போக்குவரத்துச் செலவு | ரூ | 30 000 |
| மின்சாரக்கட்டணம் செலுத்தியது | ரூ | 5 000 |
| தொலைபேசிக்கட்டணம் | ரூ | 3 000 |
| விளம்பரச் செலவு | ரூ | 6 000 |
| வாடகை செலுத்தியது | ரூ | 15 000 |

❖ தொலைபேசிக்கட்டணம் ரூ 2 000 இன்னும் செலுத்தப்பட வேண்டியிருந்தது

❖ ரதன் குளிரூட்டி திருத்துவதற்கான நவீனரக உபகரணங்களை வரையறுத்த JET கம்பனியில் 01.01.2019 இல் ரூ 80 000 க்கு கொள்வனவு செய்தார்.

❖ தளபாடம் மற்றும் உபகரணங்களுக்கு வருடாந்தம் 12% பெறுமானத் தேய்விடல் வேண்டும்.

❖ ரதன் எதிர்காலத்தில் குளிரூட்டி திருத்துவதில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு பயிற்சி வகுப்புக்கள் வழங்க எண்ணியதுடன், தனது நண்பன் குகனை பங்காளராக இணைக்கவும் தீர்மானித்துக்கொண்டார்.

(1) (அ) ரதனின் வணிகம் நோக்க அடிப்படையில் எவ்வகையான வணிக அமைப்பைச் சேர்ந்தது?
(ஆ) ரதனின் வணிகம் சேவை உற்பத்தி வணிகமா? பொருள் உற்பத்தி வணிகமா? நீர் குறிப்பிடப்படும் வணிகத்திற்கு காணப்படும் பண்புகள் இரண்டு தருக.

(2) ரதனின் வணிகத்தினால் பயன்படுத்தப்படும் உற்பத்திக் காரணிகள் நான்கினை சம்பவத்திலிருந்து உதாரணங்கள் மூலம் குறிப்பிடுக.

(3) (அ) ரதனின் வணிகத்தில் பயன்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் மாறி ஒன்றினைக் குறிப்பிடுக.
(ஆ) பின்வரும் கூற்றுக்களில் காணப்படும் முகாமைத்துவக் கருமம் எது?
1. முகாமையாளர், ஊழியர்களை நியமித்தல்
2. குளிரூட்டி திருத்தும் பயிற்சி வழங்கல் நிலையம் ஒன்றினை ஆரம்பிக்க தீர்மானித்தல்



kalvi.lk

(4) (அ) ரதன் எதிர்காலத்தில் எவ்வாறான வணிக அமைப்பினை ஆரம்பிக்க முடியும்?
(ஆ) நீர் குறிப்பிடும் வணிகத்தில் காணப்படும் அனுகூலமான பண்புகள் இரண்டு தருக.
(5) 01.01.2019 இல் குளிரூட்டி திருத்தும் வணிகத்தின் உரிமையாண்மை எவ்வளவு?
(6) (அ) இம்மாதத்தில் பொறுப்புக்களில் குறைவை ஏற்படுத்திய கொடுக்கல், வாங்கல் எது?
(ஆ) மேற்குறித்த கொடுக்கல், வாங்கலுக்கான இரட்டைப்பதிவினைத் தருக.
(7) செலுத்த வேண்டிய தொலைபேசிக் கட்டணம், தளபாட பெறுமானத் தேய்வு என்பவற்றிற்கான பொதுநாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.
(8) (அ) 31.01.2019 இல் இருந்தவாறு வணிகத்தில் காசுமீதி எவ்வளவு?
(ஆ) JET கம்பனியில் நவீன உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான முதற் பதிவேட்டைத் குறிப்பிடுக.
(9) குளிரூட்டி திருத்தும் வணிகத்திலிருந்து பின்வரும் கணக்குகளுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.
(அ) உரிமைக் கணக்கு (இ) சொத்துக் கணக்கு
(ஆ) வருமானக் கணக்கு (ஈ) பொறுப்புக்கணக்கு
(10) 2019 ஜனவரி மாதத்திற்கான ரதனின் வணிகத்தின் தேறிய இலாபத்தைக் கணிப்பிடுக.

(2×10= 20 புள்ளிகள்)

## பகுதி 11
## வணிகக்கல்வி
## (இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக)

**வினா இல 02**

1. தேவைகளை நிறைவேற்றும் நான்கு வணிகங்களின் பெயர்கள் கீழே தரப்படுகின்றன.
   A. சுவையூற்று குளிர்களி விற்பனை நிலையம்
   B. பெண்களுக்கான அழகுசாதன பொருள் விற்பனை நிலையம்
   C. டயலாக் தொலைத்தொடர்பு நிறுவனம்
   D. யாழ் நூலகம்

   (அ) மேற் குறிப்பிட்ட நிறுவனங்களினால் நிறைவு செய்யப்படும் மனித தேவைகளைக் குறிப்பிடுக.

   (ஆ) மேற்படி நிறுவனங்களினால் நிறைவு செய்யப்படும் விருப்பங்களுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

(02 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா பொய்யா என்பதனைக் குறிப்பிடுக.
   i. வணிகமொன்றில் இடர்களை பொறுப்பேற்று புத்துருவாக்கங்களை அறிமுகப்படுத்துபவர் முகாமையாளர் ஆவார்.
   ii. முன்னைய காலங்களில் பயன்படுத்தப்பட்ட சாதாரண தபாலுக்கு பதிலாக தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல் என்பன பயன்படுத்தப்பட்டு வருவதற்கு காரணமாக அமையும் சூழல் தொழில்நுட்பச் சூழல் ஆகும்.
   iii. கல்வித் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம் என்பன இலாப நோக்கற்ற வணிக அமைப்புக்களில் தனியார் துறையை சார்ந்ததாகும்.
   iv. ஜனநாயக முறையிலான நிர்வாக முறைமை காணப்படுவது கூட்டுத்தாபன வணிக அமைப்புக்களில் ஆகும்.

(02 புள்ளிகள்)

3. தேசிகன் என்பவர் தனது சொந்த சேமிப்பு மற்றும் மக்கள் வங்கியில் பெற்ற கடனை பயன்படுத்தி கணினி மற்றும் மடிக்கணினி திருத்தும் வணிகமொன்றை இரண்டு ஊழியர்களை வேலைக்கமர்த்தி நடாத்தி வருகின்றார்.
   அ. மேற்படி வணிகத்தில் அக்கறை செலுத்தும் தரப்பினர் இருவரைக் குறிப்பிடுக.

   ஆ. மேற்படி வணிகம் உற்பத்தியின் தன்மை அடிப்படையில் எவ்வகை வணிகமெனக் கருத முடியும்?

(02 புள்ளிகள்)



kalvi.lk

4. நகரமயமாக்கம் காரணமாக இலங்கையில் தற்போது நிர்மாணத் துறையானது அதீத வளர்ச்சி கண்டு வருவதனை அவதானித்த நிமலன் கட்டிட ஒப்பந்த நிறுவனமொன்றை 'ஸ்மார்ட் கொன்ஸ்ரக்சன்ஸ்' என்னும் பெயரில் ஆரம்பித்திருந்தார். நிமலன் வணிகத்தின்,
அ. வாய்ப்பு ஒன்றினைக் குறிப்பிடுக.

ஆ. ஸ்மார்ட் வணிகம் கட்டிடங்களை கட்டுவதற்கு தேவையான சீமேந்து கற்களை தானே உற்பத்தி செய்கின்றரெனின், சீமேந்து கற்கள் எந்த உற்பத்திக் காரணிக்கு உரித்தாகும்.

(02 புள்ளிகள்)
(மொத்தம் 08 புள்ளிகள்)

**வினா இல 03**

1. அ. சில்லறை வியாபாரம் என்றால் என்ன?
ஆ. வணிக வங்கிகளால் பேணப்படும் வைப்பு வகைகளுக்கு இரண்டு உதாரணம் தருக.

(02 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா எனக் குறிப்பிடுக.
   i. நிலையான வைப்புச் சான்றிதழைப் பிணையாக வைத்து வங்கியிலிருந்து குறிப்பட்ட வீதத்தினை கடனாக பெற்றுக் கொள்ள முடியும்.
   ii. வணிகமொன்றின் அகத் தொடர்பாடலின் போது தொடர்பாடல் இடம்பெறும் தடவைகளின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்புடும்.
   iii. பிரயாணம் முடியும் வரையில் பயன்படுத்தக் கூடிய போக்குவரத்து முறையாக புகையிரதப் போக்குவரத்துக் காணப்படுகின்றது.
   iv. தனியாள் வணிகமொன்றை பதிவு செய்வதன் மூலம் சட்ட ஆளுமையை பெற்றுக் கொள்ள முடியும்.

(02 புள்ளிகள்)

Education
அධ்‍යාපන

3. க.பொ.த உயர்தரம் கற்ற ரவி, வாசு, கீதன் ஆகிய மூவரும் இணைந்து அலுவலகங்கள், மற்றும் பாடசாலைக்கு பாதுகாப்பு புகைப்படக் கருவி (CCTV Camera) இணைக்கும் வணிகமொன்றை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதுடன், மேற்குறித்த வணிகத்தினை சட்ட ஆளுமையுள்ள, நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்ட வணிகமாக ஆரம்பிப்பது சிறப்பானது என எண்ணுகின்றார்.
அ. மேற் குறித்த மூன்று நண்பர்களுக்கும் நீங்கள் சிபார்சு செய்யும் சிறந்த வணிக அமைப்பினைக் குறிப்பிடுக.
ஆ. மேலே (அ) வில் குறிப்பிட்ட வணிக அமைப்பில் காணப்படும் சாதகமான அம்சம் ஒன்றினையும் பாதகமான விடயம் ஒன்றினையும் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

4. கலைமகள் வித்தியாலயத்தின் வணிகப் பிரிவு மாணவர்கள் தமது பாடசாலையில் மாணவர்களுக்கான காகிதாதி, எழுது பொருட்களை குறைந்த விலையில் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் பாடசாலை கூட்டுறவுச் சங்கம் ஒன்றை ஆரம்பிக்க எண்ணுகின்றனர்.
ஆ. கூட்டுறவுச் சங்கம் என்பதனால் கருதப்படுவது யாது?
ஆ. கூட்டுறவுச் சங்கத்தினை பதிவு செய்வதற்கான சட்டத்தினைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)
(மொத்தம் 08 புள்ளிகள்)

**வினா இல 04**

1. அ. முகாமைத்துவம் என்றால் என்ன?
   ஆ. முதலீட்டு வழிமுறைகள் இரண்டு தருக.

(02 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதைக் குறிப்பிடுக.
   i. திட்டமிடப்பட்ட முறையில் நடவடிக்கைகள் இடம்பெறாவிடின் அதற்குறிய காரணங்களை தேடியறித்து மீண்டும் திட்டமிடல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் கட்டுப்படுத்தல் எனப்படும்.
   ii. உற்பத்திப் பொருளொன்று நுகர்வோருக்கு விநியோகிக்கப்பட்டதுடன் சந்தைப்படுத்தல் செயன்முறை நிறைவடைகின்றது.
   iii. பொருட்களை விநியோகிக்கும் செயன்முறையில் இடைத்தரகர் ஒருவராக சில்லறை வியாபாரி செயற்படுகின்றார்.
   iv. முதலீட்டின் அனுகூலமாக பங்கு இலாபம் கிடைக்கப் பெறுவது சாதாரன பங்குகளுக்காகும்.

(02 புள்ளிகள்)

3. பிரபல நகரில் அமைந்திருக்கும் சிங்கர் (Singer) கம்பனியின் காட்சியறையில் அதன் உற்பத்திப் பொருட்கள் அனைத்தும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதுடன் அப்பொருட்கள் தவணைக் கட்டண முறையின் அடிப்படையிலும், உடன்காசு அடிப்படையிலும் விற்பனை செய்யப்படுகின்றது. குறித்த நிறுவனத்தின் உற்பத்திப் பொருளின் தரம் பற்றிய விசுவாசம் காரணமாக வாடிக்கையாளர் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது.
   அ. மேற்குறித்த சம்பவத்தில் இனங்காணக் கூடிய சந்தைப்படுத்தல் கலவை மாறிகளை உதாரணங்களுடன் குறிப்பிடுக.
   ஆ. சிங்கர் (Singer ) கம்பனியின் உற்பத்தி பொருள் ஒன்றினைக் குறிப்பிட்டு அதன் இலக்கு நுகர்வோரை இனங்காண்க.

(02 புள்ளிகள்)

4. விமலன் தனது உழைப்பின் மூலம் சேமிப்பாக ரூ 100 000 இனை வைத்திருந்தார். இப்பணத்தினை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்வதா? அல்லது சாதாரண பங்குகளில் முதலீடு செய்வதா? என்பது பற்றிய ஆலோசனை ஒன்றினை உம்மிடம் வேண்டி நிற்கின்றார்.
   (அ) பல்வேறு முதலீட்டு வழிமுறைகளில் பொருத்தமான முதலீட்டு வழிமுறையொன்றை தெரிவு செய்யும் போது கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் இரண்டு தருக.
   (ஆ) திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்வதால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக.

(02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி 11
## கணக்கியல்
## ( இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக)

**வினா இல 05**

1. அ. வணிகமொன்றுக்கும், வேறு பிரிவினருக்குமிடையே நடைபெறும் வளங்களின் பரிமாற்றம் எவ்வாறு அழைக்கப்படும்?
   ஆ. கணக்கீட்டில் கருத்தில் கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல் எது?

(02 புள்ளிகள்)

2. வணிகமொன்றில் காணப்படும் சொத்துக்கள் சில கீழே தரப்படுகின்றன.

| | |
|---|---|
| கடன்பட்டோர் | காசு மீதி |
| மோட்டார் வாகனங்கள் | உபகரணங்கள் |
| சரக்கிருப்பு | பெறவேண்டிய வருமானம் |
| தளபாடங்கள் | இயந்திரங்கள் |

மேற் கூறியவற்றை பின்வரும் தலைப்புக்களில் வகைப்படுத்திக் காட்டுக.
அ. நடைமுறைசொத்து
ஆ. நடைமுறையல்லாச் சொத்து

(02 புள்ளிகள்)

3. கதிரவன் வணிகத்தில் பின்வரும் மீதிகள் 2019 யூலை 01 இல் காணப்பட்டன.

| | |
|---|---|
| மோட்டார் வாகனம் | ரூ 300 000 |
| சரக்கிருப்பு | ரூ 100 000 |
| கடன்பட்டோர் | ரூ 75 000 |
| காசு | ரூ 100 000 |
| வங்கிக்கடன் | ரூ 200 000 |
| கடன்கொடுத்தோர் | ரூ 75 000 |
| மூலதனம் | ரூ 300 000 |

யூலை மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு:-
01. கதிரவன் மேலதிக மூலதனமாக ரூ 200 000 இனை ஈடுபடுத்தினார்.
02. ரூ 50 000 பெறுமதியான சரக்குகள் மீள் விற்பனை நோக்கம் கருதி கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டன.
03. காப்புறுதிக் கட்டணமாக ரூ 5 000 செலுத்தப்பட்டது.
04. கடன்பட்டோரிடமிருந்து ரூ 30 000 பெறப்பட்டது.
05. விற்பனை தரகு வருமானமாக ரூ 3 000 பெறப்பட்டது.

மேற்காட்டிய கொடுக்கல் வாங்கல்களை பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் பதிந்து காட்டுக.

மோட்டார் வாகனம் + சரக்கிருப்பு + கடன்பட்டோர் + காசு = உரிமை + வங்கிக்கடன் + கடன்கொடுத்தோர்

(04 புள்ளிகள்)

4. (அ) சுமங்கலி என்பவரது புடைவை வணிகத்தின் 2018 ஆம் ஆண்டு யூன் மாதத்திற்கான கடன் விற்பனைகள் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளன.

| திகதி | பட்டியல் இல | கொள்வனவாளர் | அளவு | ஏனைய தகவல்கள் |
|---|---|---|---|---|
| 10.06.2018 | 201 | கீதாஞ்சலி | ஓவ்வொன்றும் ரூ 500 வீதம் 10 ரீசேர்ட்டுகள் | வியாபாரக் கழிவு 10% |
| 22.06.2018 | 301 | கவிதாஞ்சலி | ஓவ்வொன்றும் ரூ 600 வீதம் 20 ரீசேர்ட்டுகள் | வியாபாரக் கழிவு 5% |

**வேண்டப்படுவது:-**

- மேற்படி கொடுக்கல்வாங்கல்களை உரிய நாட்குறிப்பேட்டில் பதிந்து காட்டுக.

(02 புள்ளிகள்)



Education
அධ්‍යාපන
kalvi.lk

(ஆ) அமரன் வணிகத்தின் கணக்கு எழுதுனரால் 31.12.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கு தயாரித்த பரீட்சை மீதி சரியான முறையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவர் தயாரித்த பரீட்சை மீதி வருமாறு:-

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| காசு மீதி | 50 000 | |
| முதலீடு | | 200 000 |
| இயந்திர உபகரணம் | 75 000 | |
| நானாவித வருமானம் | 3 000 | |
| வுாடகை | | 8 000 |
| காணி கட்டிடம் | 100 000 | |
| கொள்வனவு | 50 000 | |
| விற்பனை | | 262 000 |
| மூலதனம் | | 250 000 |
| சம்பளம் | 8 000 | |
| பெற்ற கழிவு | | 2 000 |
| கடன் கொடுத்தோர் | 12 000 | |
| கடன்பட்டோர் | | 14 000 |

➢ மேலேயுள்ள பரீட்சை மீதியை திருத்தி சரியாகத் தயாரிக்குக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

**வினா இல 06**

1. (அ) வங்கிக் கூற்று என்பதனால் கருதப்படுவது யாது?

   (ஆ) 'காசேட்டைப் போன்றே சில்லறைக் காசேடும் இரட்டைத் தொழிற்பாட்டை நிறைவேற்றுகின்றது' இக் கூற்றை நீர் ஏற்றுக் கொள்வீரா? காரணம் தருக. (02 புள்ளிகள்)

2. (அ) கணினி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டின் அனுகூலங்கள் இரண்டு தருக.

   (ஆ) பொது நாட்குறிப்பில் பதியக் கூடிய கொடுக்கல்வாங்கல்களுக்கு இரண்டு உதாரணம் தருக. (02 புள்ளிகள்)

3. (அ) லாவண்யா வணிகத்தின் 2018.12.31 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சைமீதி சமப்படவில்லையாதலால் அதன் வேறுபாட்டுத் தொகை தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. பின்னர் வேறுபாட்டிற்கான காரணங்களை அறிந்து அவ்வழுக்கள் பொது நாட்குறிப்பேட்டின் மூலம் திருத்தப்பட்டு பரீட்சைமீதி சீராக்கப்பட்டது.

   லாவண்யா வணிகத்தின் கணக்கு எழுதுனர் மூலம் கணக்கீட்டு வழுக்கள் திருத்தப்பட்டு தயாரிக்கப்பட்ட தொங்கல் கணக்கு வருமாறு:-

| திகதி | விபரம் | பே.ப | தொகை | திகதி | விபரம் | பே.ப | தோகை |
|---|---|---|---|---|---|---|---|
| | விற்பனைக் கணக்கு | | 5 500 | | இயந்திரக் கணக்கு | | 5 000 |
| | மின்சாரக் கணக்கு | | 1 000 | | சம்பளக் கணக்கு | | 2 500 |
| | | | | | கொள்வனவுக் கணக்கு | | 2 000 |

➢ பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

I. வழுக்களை திருத்துவதற்கு முன்னர் பரீட்சை மீதியில் காணப்பட்ட பரீட்சை மீதியில் வேறுபட்டிருந்த தொகையைக் கணிப்பிடுக.

II. பரீட்சை மீதியில் குறைவான பெறுமானம் எந்நிரலில் காட்டப்பட்டுள்ளது.

III. தொங்கற் கணக்கு மீதியை பதிவதற்கு முன்னர் பரீட்சைமீதியின் வரவு மீதிகளின் கூட்டுத்தொகை 25 600 ஆக இருப்பின் குறிப்பிடப்படும் செலவு மீதிகளின் கூட்டுத்தொகையினைக் குறிப்பிடுக.

(02 ள்ளிகள்)



kalvi.lk

(ஆ) கீழே 31.12.2018 நியாஸ் வணிகத்தில் ஏற்பட்ட செலவுகள் சில தரப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| வாடகை | ரூ 10 000 | சம்பளம் | ரூ 25 000 |
| விளம்பரம் | ரூ 10 000 | வங்கிக் கடன் வட்டி | ரூ 8 000 |
| தீயழிவு | ரூ 2 000 | விற்பனை ஊழியர் சம்பளம் | ரூ 5 000 |

- மேற்படி செலவுகளை கீழ்வரும் தலைப்புக்களில் வகைப்படுத்தி அவற்றின் பெறுமதிகளைக் குறிப்பிடுக.

1. நிலைய நிர்வாகச் செலவு
2. நிதிச் செலவு
3. விற்பனை விநியோகச் செலவு
4. ஏனைய செலவு

(02 புள்ளிகள்)

4. (அ) மாதவன் வணிகத்தில் 2018.12.31 இல் முடிவடைந்த வணிகத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு:-

I. மாதம் ஒன்றிற்கு ரூ 12 000 வீதமாக வருடத்திற்குள் பெற்ற வாடகை ரூ 84 000.

II. காப்புறுதி தவணைக் கட்டணம் மாதமொன்றிற்கு ரூ 20 000 வருடத்துக்குள் செலுத்தப்பட்டது ரூ 220 000.

III. வேறு வணிகத்திற்கு வான் வண்டியொன்று மாதாந்த வாடகை ரூ 50 000 என்ற அடிப்படையில் வழங்கப்பட்டது. வருடத்துக்குள் பெற்ற வாடகை ரூ 500 000

IV. வருடத்துக்குள் கிடைத்த மின்பட்டியல் தொகை ரூ100 000 செலுத்தப்பட்ட மின்பட்டியல் தொகை ரூ 70 000

மேற்படி கொடுக்கல் வாங்கல்களை பின்வரும் அட்டவணையில் பூர்த்தி செய்க.

| கொடுக்கல் வாங்கல் | செலுத்த வேண்டிய செலவு / தொகை | பெற வெண்டிய வருமானம் | நிதியாண்டுக்குரிய மொத்த செலவு/ வருமானத் தொகை |
|---|---|---|---|
| I. | | | |
| II. | | | |
| III. | | | |
| IV. | | | |

(02 புள்ளிகள்)

(ஆ) அச்சகம் ஒன்றில் இடம்பெற்ற செலவினங்கள் சில கீழே தரப்படுகின்றன.

A. தாள்களின் கிரயம்
B. காவலாளிக்கான கூலிகள்
C. காப்புறுதிச் செலவுகள்
D. இயந்திரச் செயற்படுத்துனருக்கான கூலிகள்
E. மின்சாரச் செலவுகள்
F. தனியுரிமைக் கட்டணம்

(1) மேலே தரப்பட்ட அச்சகம் தொடர்பில் ஏனைய நேர்செலவு ஒன்றினைக் குறிப்பிடுக.
(2) அச்சகத்தின் உற்பத்தி மேந்தலைக் கணிப்பீட்டிற்கு உட்படுத்தப்படும் உருப்படிகளைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)



kalvi.lk

**வினா இல 07**

1. கீழே கொடுக்கப்படும் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் 2018 ஆம் ஆண்டிற்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கைப் பயன்படுத்துக.

| விபரம் | தொகை | விபரம் | தோகை |
|---|---|---|---|
| மீதி வந்தது | 10 000 | திருத்தும் செலவு | 6 000 |
| அங்கத்துவப் பணம் 2017 | 2 000 | உபகரணச் செலவு | 3 500 |
| 2018 | 18 000 | எழுது உபகரணம் | 4 000 |
| 2019 | 3 000 | சம்பளம் | 15 000 |
| பழைய பத்திரிகை விற்பனை | 6 000 | மீதி சென்றது | ……….. |
| | 39 000 | | 39 000 |

- ➢ சங்கத்தின் அங்கத்தவர் எண்ணிக்கை 200 ஆகும். அங்கத்துவர் ஒருவருக்கான அங்கத்துவ பணம் ரூ 100 ஆகும்.
- ➢ செலுத்த வேண்டிய சம்பளம் ரூ 5000 பயன்படுத்தி முடிக்காத எழுது உபகரணம் ரூ 500

1) கொள்ளல் கொடுத்தல் கணக்கின் மீதியினைக் கணிப்பிடுக.
2) வருமானச் செலவுக் கணக்கில் பதிவு செய்யப்படும் வருடத்திற்கான அங்கத்துவப் பணத்தின் அளவினைக் குறிப்பிடுக.
3) 2018 ஆம் வருடத்திற்கு கிடைக்க வேண்டிய அங்கத்தவப் பணத்தின் அளவினைக் குறிப்பிடுக.
4) வருமானச் செலவுக் கணக்கினைத் தயாரித்த பின்னர் வரும் மீதியினைக் கணிப்பிடுக.

(04 புள்ளிகள்)

2. 31-12-2018 இல் உள்ளவாறான வர்ஷா வணிகத்தின் பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

| **விபரம்** | **தொகை** | **தொகை** |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 20 000 | |
| தளபாடம் (கிரயத்தில்) | 100 000 | |
| விநியோக வான் (கிரயத்தில்) | 200 000 | |
| **பெறுமானத்தேய்வு ஏற்பாடு** | | |
| விநியோக வான் (01.01.2018) | | 40 000 |
| தளபாடம் (01.01.2018) | | 10 000 |
| 12% வங்கிக்கடன் | | 60 000 |
| தொலைபேசிக் கட்டணம் | 10 000 | |
| விற்பனைகள் | | 210 000 |
| மூலதனம் | | 200 000 |
| கொள்வனவுகள் | 110 000 | |
| கடன் கொடுத்தோர் | | 29 000 |
| கடன்பட்டோர் | 40 000 | |
| பெற்ற கழிவுகள் | | 3 000 |
| கொடுத்த கழிவு | 3 500 | |
| வங்கிக்கடன் வட்டி | 5 000 | |
| உட்சுமை கூலி | 6 000 | |
| அறவிடமுடியாக் கடன் | 2 000 | |
| மின்சாரக் கட்டணம் | 2 500 | |
| நிர்வாகச் சம்பளம் | 14 000 | |
| விளம்பரம் | 5 000 | |
| காசுமீதி | 34 000 | |
| | 552 000 | 552 000 |

**மேலதிக தகவல்கள்:-**

**1)** 31.12.2018 இல் உள்ளவாறான சரக்கிருப்பின் பெறுமதி ரூ 35 000 ஆகும்.
**2)** தளபாடத்திற்கும், விநியோக வாகனத்திற்கும் நேர்கோட்டு முறையில் 10% பெறுமானத்தேய்விடல் வேண்டும்.
**3)** 31.12.2018 இல் செலுத்தப்படாதுள்ள தொலைபேசிக்கட்டணம் ரூ 2000 ஆகும்.

வேண்டப்படுவது:-

(அ) 31.12.2018 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று. (04 புள்ளிகள்)
(ஆ) 31.12.2018 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று. (04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)